# வேதம் காட்டும் நெறி

சோகத்தூர் ராமானுஜாசாரியார், பெங்களூரு

புலன்களாலோ மனதால் ஆராய்ந்தோ அறியமுடியாத, அவற்றுக்கு அப்பாற்பட்ட, உயர்ந்த பொருட்களைப் பற்றி அறிவிப்பது வேதநூல் ஆகும். இது தொடக்கமும், முடிவும் அற்று, எப்பொழுதும் ஒலிவடிவில் ஒரே தொடர்ச்சி முறையுடன் இருப்பதாகும்.

நமது விஶிஷ்டாத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில், அறிவுக்குக் காரணமான மூன்று ப்ரமாணங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ப்ரத்யக்ஷம் (புலனறிவு), புலன்களால் அறிந்ததைக் கொண்டு மனதின் மூலமாக தர்மபூதஜ்ஞானத்தால் ஆராய்ந்து பெறும் அனுமானம் மற்றும் ஶப்தம் எனும் நம்பத்தகாதாரல்லாதாரின் கூற்று என்கிற மூவகைகள் அடங்குகின்றன.

ப்ரத்யக்ஷத்தில், கருவிகளில் கோளாறு அல்லது குறை மற்றும் முதலில் அறிந்ததற்குப் பின்னர் முரண்பாடு ஏற்படுதல் முதலிய காரணங்களால், புலன்களால் உண்டான அறிவில் தவறு நேரமுடியும்.

அனுமானத்திலும், அடிப்படையான ப்ரத்யக்ஷத்திலும் மற்றும் ஆராய்ச்சி அணுகுமுறையில் தவறுதல், கொள்கையில் கோளாறுகள் முதலியவற்றால் உண்டான அறிவில் தவறு நேரமுடியும். இங்கு குறிப்பாக காரணத்துக்கும் காரியத்துக்கும் (விளைவுக்கும்) தொடர்பு நன்கு பரிஶீலிக்கப்பட வேண்டும்.

ஶப்தத்திலும் வேதங்கள், ஸ்ம்ருதி, ஆகமம், இதிஹாஸ புராணங்கள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் போன்ற முன்னோர்களின் நூல்கள் முதலிய பலவகைகள் உள்ளன. இவற்றில் வேதத்தின் விஷயத்தில் மட்டும் எப்போதும் தவறான அறிவு உண்டாக்காத தன்மை இயற்கையாகவே அமைந்துள்ளது.

வேதத்தின் நித்யத்வம் மற்றும் அபௌருஷேயத்வம் அதன் ப்ராமாண்யத்துக்குக் காரணம் ஆகின்றன. அதாவது அது மஹாப்ரளயம் உட்பட எப்போதும் இருப்பதாலும் அதனாலேயே படைப்பு உண்டாவதாலும், மாற்றமின்றி ஒரே மாதிரி இருப்பதால் நித்யம் என்கிறது. வேதத்தை இயற்றியவர் எவரும் இலர். பகவான் கூட மஹாப்ரளயத்தில் அவற்றை நினைவில் கொண்டிருந்து, படைக்கத் துவங்கும் போது பிரமனைப் படைத்து அவனுக்கு அறிவிக்கிறான். வேதங்கள் பகவானின் மூச்சுக்காற்றென உபநிஷத் கூறுகிறது. ஆதலால் அபௌருஷேயம் என்னப்படுகிறது.

இதில் வேதம் ஸாத்விக, ராஜஸ, தாமஸ வகைப்பட்ட எல்லா உயிரினங்களுக்கும் நன்மை, தீமைகளை விவரித்து தீயவற்றை விலக்கி, அவற்றில் நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, நடைமுறையில் கொணர்ந்து எல்லா நன்மைகளையும், மேன்மைகளையும் அடைய வழி காட்டுகிறது.

இப்படிப்பட்ட வழிகளில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

தைத்திரீயோபநிஷத்தில் கூறப்பட்டுள்ள ஆசான் கல்வியைக் கற்பித்து சீடனை வீட்டுக்கு அனுப்பும் பொழுது அவனுக்குச் செய்யும் அறிவுரையாவது -

உண்மையையே பேசு. அறத்தைக் கடைப்பிடி. அவரவர்க்கு வகுத்த கடமைகளை என்றும் வழுவாது செவ்வனே செய்திடு. சிறுவனாயிருக்கும் பருவத்தில் கல்வியில் ஊற்றம் கொள். இளமையில் குடும்பத்தைப் பேணி காத்திடு. வாய்மை, அறம், நற்செயல்கள், மேன்மை அளிப்பன, கல்வி முதலியதை விட்டிடாதே. அன்னை, தந்தை, ஆசான், விருந்தாளி - இவர்களை தேவனென, அதாவது கடவுளாக, வழிபடு. நல்லதையே பேண். தீயவற்றை விலக்கு. எம்முடைய நல்ல தன்மைகளைப் பின்பற்று. மற்றவற்றை விலக்கிடு. தேவர்களையும் மூதாதையரையும் வழிபடாமல் இராதே. கற்றலையும் கற்பித்தலையும் உயர்ந்த கடமையெனப் பேணி என்றும் அவற்றை விட்டிடாதே. எமக்கு உயர்ந்தவரிடம் பணிவுடனும் அன்புடனும் நடந்து கொள். ஈகை சிறந்தது. அதுவும் நம்பிக்கை, அக்கறை, நாணம், உயர் நினைவு, அறிவு முதலியவற்றுடன் செய்யத்தக்கது. ஏதாவது கொள்கைகளிலோ, நடைமுறையிலோ ஐயம் உண்டானால் அங்குள்ள பண்பட்ட,

அனுபவ முதிர்ச்சியுள்ள பெரியவர்களை அணுகி, பணிந்து கேட்டுத் தெளிந்து அவர் சொற்படியும், செயற்படியும் இருந்திடு.

இது நன்மை பயப்பது, மீறத்தகாதது. இவ்வாறு அறிந்து செயல்படத்தக்கது என வேதத்தின் கட்டளை என்பதாம்.

நான்கு முக்கிய பேறுகளாக (புருஷார்த்தங்களாக) மனிதப்பிறவியில் அடையத்தக்கவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாம்.

**தர்மம்** - அவற்றில் **அறமானது** இவ்வுலகில் பெயர், புகழ், மதிப்பு, உவகை, மேன்மை எல்லாம் ஒரு நன்கு பூத்திருக்கும் மரமானது வெகு தொலைவு வரை மணக்குமோ அவ்வாறு நற்செயல்களின் மணம் வெகு தொலைவு வரை மணக்கும். அதாவது பல தலைவுறைகள் வரை பயனளிக்கும் என்றபடி.

மேலுலகத்திலும் நீண்ட காலம் இன்புற வழி வகுக்கும் என்பதாலும், உலகம் அறமுடையோனை அண்டியே இருப்பதாலும் அது (தர்மம்) உலகின் ஆதாரமாக, அடிப்படையாகக் கருதப்படுகிறது. அது பாவங்களைப் போக்குவது. நீண்ட ஆயுள், நல்லறிவு, புகழ் மற்றும் வலிமையை அளிப்பது. அதனால் சான்றோர்க்கு அறத்தில் ஈடுபாடு இயல்பாகவே நிலைத்திருக்கும்.

வேதம் தான் முழுவதுமாக அறத்துக்கு வேராக உள்ளதால் வேதத்தின் பொருளை ஆராயும் மீமாம்ஸை எனும் ஶாஸ்த்ரம் முதல் பகுதியாக ஸாத்யமான தர்மத்தைப் பற்றினதாக உள்ளது. மேற்பகுதி ப்ரஹ்மத்தைப் பற்றினதாக ஸித்த தர்மத்தை ஆராய்ந்து விளக்குகிறது.

**அர்த்தம் - பொருள்**, செல்வம், உணவு, உடை, உறைவிடம், மனைவி, மக்கட்பேறு, கால்நடை, மழை, பயிர், பச்சை, தோட்டம், புகழ், அதிகாரம், வெற்றி, முதன்மை, மேன்மை, கல்வி, கேள்வி, வேள்வி முதலியன விரும்பி வருந்தி, உழைத்துப் பெறத்தக்கனவாகின்றன. இவை அன்றாட வாழ்க்கைக்கு இன்றி-யமையாததாலும் எளிதில் எல்லோரும் அறியத்தக்கதாலும் அவற்றை நிலையாக அடைய வேதம் வழி வகுக்கிறது.

வேள்விகளால் பெறப்பட்ட பொருட்கள் நீடித்தும், நன்மை பயந்தும், தனக்கும் பிறருக்கும் பயன்படும். வேதத்தில் கூறிய வழியால் எதை அடைந்தாலும் அது வேள்வியாகி வேட்போனாகிய தனக்கும் அதைச் செய்ய உதவிய எம்பெருமானுக்கும் மற்றும் அவன் தூய அடியார்க்கும் பயனளிக்கும்.

எடுத்துக்காட்டாக உணவை பார்ப்போம். இங்கு உணவு படைத்திருத்தல், அதை உண்ண முடிதல், அதை பிறர்க்கு அளிக்க முடிதல், அதனால் தீவினைகளை அகற்றிக் கொள்ளல் (எம்பெருமானுக்குப் படைத்து, வைஶ்வதேவ, தேவ, பித்ரு, பூத, மனுஷ்ய, ப்ரஹ்ம யஜ்ஞமெனும் ஐந்து மஹாயஜ்ஞங்களால்) தகுந்த நபர்களுக்கு ஈந்து தானும் ஏற்றுக் கொள்ளல் எனப் பல வகைகளில் வேதம் வழி காட்டுகிறது.

**காமம் - இன்பம்** - இதுவும் பல பொருட்களால் ஏற்படுவது. மேற்கூறிய நீண்ட ஆயுள் முதலிய பேறுகளில் எல்லாம் இன்பமும் கலந்துள்ளது. அது தவிர இனிமையான இல்லறம், மக்கட்பேறு, பல பெண்டிரை மனைவியாக அடைதல், உடல் வலிமை, பிறரை ஈர்த்தல், எதிரிகளை அடக்கல், அழித்தல், பொலிவு, செல்வம், புகழ், பெருமை, உணவுடைமை போன்றவை இவ்வுலகத்தில் இன்பம் பயப்பன. மேலுலகங்களிலும் துன்பம் கலவாத இன்பம் ஸ்வர்க்கம் எனப்படுவது. ஆக, வேதத்தின் அறிவுரைப்படி அடைந்த இன்பம் போற்றத்தக்கதாகிறது.

பேறுகள் புருஷார்த்தங்கள், அதாவது, மனிதர்களால் வேண்டி அடையப்படுபவை, அடையத்தக்கவை என்னப்படும். நான்கு வகையான அவற்றில் த்ரிவர்க்கம் எனப்படும் முதல் மூன்றும் முடிவுள்ளதும், அடைவதில் பல இன்னல்கள், அடைந்த பின்னும் நிம்மதியின்மை, குறுகிய காலம் இருத்தல், மீண்டும் மீண்டும் முயன்று பெறவேண்டுதல், நிறைவளிக்காமை, அலுப்பு தட்டுதல், கட்டுப்படுத்துபவை முதலிய பல காரணங்களால் முயன்று, அடைந்து, அலுத்து, விடத்தக்கவை.

***வீடு*** - இது **மோக்ஷம்** எனப்படுவது. கட்டிலிருந்து விடுதலை என்றபடி. இது மற்ற மூன்று பேறுகளில் இல்லாத தன்மைகளான, நிலையானதும், அளவற்றதும், ஒரு முறை முயல்வதாலேயே கிடைக்குமதும் கொண்டது.

ஆக, வேதம் தன் இறுதிப் பகுதியான உபநிஷத்தில், வேதாந்தத்தில், இதை விரிவாக உரைக்கிறது.

மேற்கூறிய தைத்திரீயோபநிஷத்தும் இவ்வகைத்தே.

இதில் எம்பெருமானைப் பற்றிய முழு விளக்கத்துடன் வீடென்னும் பேற்றைப் பற்றி விளக்கம் உள்ளது. அதின் சுருக்கமாவது - உயிருள்ளதும் உயிரற்றதுமான பொருட்கள் நிறைந்த உலகங்களுக்கு படைத்தல், காத்தல், அழித்தல், வழி நடத்தல், முதலிய பல வகைகளில் ஆள்பவனான திருமாலின் பெருமையும், அவனையே வேண்டி அவனையே அடைதல் தான் வினைக்கட்டிலிருந்து விடுதலையாம். பக்தியோகம் என்றும் ப்ரபத்தி அல்லது ஶரணாகதி என்னும் வழிகளால் மட்டும் அதனை அடையலாம் எனவும் அது நலமந்தமில்லதோர் நாடான ஸ்ரீவைகுண்டத்தில் அவனுடையவும் அவனடியார்களினுடையவும் உகப்பைக் கருதி வழுவிலா அடிமைப் பணி செய்தல் என்றும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

அதில் உண்மை பேசுதல், உடலை வருத்தி தவம் செய்தல், புலனடக்கம், மனக்கட்டுப்பாடு, ஈகை அல்லது கொடை, அறம், நன்மகவு பெற்று மூதாதையரை மகிழ்வித்தல், முத்தீக்களை பேணுதல், அக்னிஹோத்ரம், வேள்விகள், த்யானம், ந்யாஸம் என்கிற எம்பெருமானை அடைக்கலம் புகுதல் என்னும் பலவகையான தவங்களைச் சொல்லி, இறுதியாகச் சொல்லப்பட்ட ஶரணாகதியே இவற்றிலெல்லாம் உயர்ந்தது என்றும் தெரிவித்திருப்பதால், திருமழிசை ஆழ்வாரைப் போன்று எல்லா வழிகளையும் கசடறக் கற்று, தேர்ந்து, ஆய்ந்து, மாயோனல்லால் தெய்வம் மற்றில்லை என அறிய முடியாத நமக்கெல்லாம் அவரைப் போன்ற மாலுகந்த ஆசிரியர் வார்த்தை தான் தஞ்சம்.

ஆகவே, நித்யமானதும், குற்றமற்றதும், ப்ரமாணங்களில் உயர்ந்ததும், தேவர், மனிதர், பறவைகள், விலங்குகள், செடிகொடிகள் முதலிய எல்லாப் பொருட்களுடைய பெயர்களையும், அமைப்புகளையும், செயல்களையும் விரித்து வழங்க உதவுவதும், எம்பெருமானுடைய தன்மையையும் அளவிறந்த பண்புகளையும் பரக்கப் பேசும் வேதம், ஆயிரம் பெற்றோரைக் காட்டிலும் நன்மை பயப்பது. எல்லோருக்கும் நல்லதைச் சொல்வது என்பதால் வேதம் காட்டும் நெறி தான் நமக்கு மிகவும் ஏற்றது.

பகவானின் அபிநவதஶாவதாரமான ஆழ்வார்களும் வேதம் தமிழ் செய்து நமக்குப் பேருதவி செய்துள்ளனர்.

ஆழ்வார், ஆசார்யர்களின் அருளிச்செயல்களிலும், தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசாகும் என்றும், இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென்? இருமாநிலம் முன்னுண்டுமிழ்ந்த செங்கோலத்த பவளவாய்ச் செந்தாமரைக்கணெண்னம்மான் பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப் புலன்கொள் வடிவு என் மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளிலே என்றும், ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே என்றும், வீடுமின் முற்றவும் வீடு செய்து உம்முயிர் வீடுடையானிடை வீடிசைமினே, என்றும் பல இடங்களில் காண்பதால் பல கற்றுக் கலங்காது, சில கற்று மயங்காது, நம் முன்னோரின் நடை பார்த்து நடப்போமாக.

ஶுபமஸ்து.